

புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ். திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 16.11.2024 அன்று துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அ.ஜீவா, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.தனலட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### மெட்ரோ ரயில் 2ம் கட்டம் : தூண்கள் அமைக்கும் பணி நிறைவு !

சென்னை, நவ.20-

சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்தில் கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் முதல் போரூர் சந்திப்பு இடையேயான உயர்மட்ட வழித்தடத்தில் தூண்கள் அமைக்கும் பணிகள் 100% முடிந்ததாக மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த உயர் மட்ட வழித்தடம் 8 கி.மீ. நீளத்தில் 4 இரட்டை அடுக்கு நிலையங்கள் மற்றும் 5 ஒற்றை அடுக்கு நிலையங்களை கொண்டது. இவற்றின் கட்டமைப்பு மற்றும் வழித்தட தூண்களை தாங்கும் வகையில் தரையின் கீழே 2,255 அஸ்திவார தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; "மற்ற மாநிலங்கள் அதிக நிதிப் பகிர்வைக் கோரினாலும், தமிழ்நாடு அரசுதான் தங்களுக்கு நிதிப் பகிர்வை அளிப்பதற்கு என்னென்ன காரணங்கள் என அளித்துள்ள விளக்கம் மிகச் சிறந்தது" என்று 16 ஆவது நிதிக் குழுத் தலைவர் அரவிந்த பனகாரியா பாராட்டிக் கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; பாராட்டோடு நின்று விடாமல், தமிழ்நாட்டுக்கான நிதிப் பகிர்வையும் நியாயமாகச் செய்ய வேண்டும். பாராட்டுச் சொற்கள் மட்டும் பசியை ஆற்றிவிடாது !**

### முனைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான

# 16 வது நிதி ஆணையத்திடம் - ஆர்.எஸ்.பாரதி ஆலோசனைகள் வழங்கினார்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. உடன் இருந்தார்!

சென்னை, நவ.20-

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள், நேற்று முன்தினம் - முனைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதி ஆணையத்திடம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆலோசனைகளை வழங்கினார்.



தமிழ்நாட்டுக்கு வருகை தந்துள்ள முனைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதி ஆணையம் நேற்று முன்தினம் (18.11.2024), மாலை, சென்னை, கிண்டியில் உள்ள ஐ.டி.சி. கிராண்ட் ஓட்டலில் "அரசியல் கட்சிகளுடன் ஆலோசனைக் கூட்டம்" நடத்தியது.

இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டார்.

மேலும் திராவிட முன்னேற்றத்தின் கழகத்தின் சார்பில் பல்வேறு ஆலோசனைகளை விரிவாக எழுத்துப்பூர்வமாக நிதிக்குழுத் தலைவரிடம் வழங்கினார்.

அப்போது கழக சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., உடனிருந்தார்.

மேற்படி ஆணையத்திடம் தாம் வழங்கிய மனுவில் குறிப்பிட்டிருந்த கருத்துகள் குறித்து ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கூறியதாவது :-

மாநில அரசுகளுக்கு நிதிப் பகிர்வில் மிகப்பெரிய முரண்பாடுகள் இருக்கிறது. ஒன்றிய அரசின் வரியில் 50 சதவிகிதத்தை மாநில அரசிற்கு வழங்க வேண்டும் என்பதை பிரதானமான கோரிக்கையாக வைத்திருக்கிறோம். அதேபோல, ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு நிதி தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்ட நிதிகளை முறையாக வழங்க வேண்டும்; அதற்குரிய வழிவகைகளை நிதி ஆணையம் மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறோம்.

குறிப்பாக, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு ஒன்றிய அரசு ஒப்புக்கொண்ட பணத்தையே வழங்கவில்லை.

அதேபோல, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இதுவரையில் வரலாறு காணாத ஒரு மிகப்பெரியபேரிடர்தமிழ்நாட்டில்-தூத்துக்குடி திருநெல்வேலி போன்ற பகுதிகளில் சென்ற ஆண்டு ஏற்பட்டது. அதனைச் சுட்டிக்காட்டி நிதி கேட்ட நேரத்தில் உரிய நிதியை ஒன்றிய அரசு வழங்கவில்லை. எனவே, அந்தப் பேரிடர் கால நிவாரண நிதியை ஒழுங்காக மாநில அரசுகளுக்கு பேரிடர் ஏற்படுகிறபோது, ஏற்படுகிற இழப்பிற்கு உரிய வகையில் நிதியினை வழங்குவதற்குரிய ஏற்பாட்டை நிதி ஆணையம் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறோம். அதேபோல, தமிழ்நாடு அரசு மிகப் பெரிய பல நல்ல மக்கள் நலத்திட்டங்களை வகுத்துக் கொண்டு வருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டை சிறப்பாகச் செயல்படுத்திய காரணத்தினால் தென்னாட்டில் இருக்கும் தமிழ்நாடு, கேரளம் போன்ற மாநிலங்களில் மக்கள் தொகை ஆண்டுக்கு ஆண்டு அகில இந்திய அளவைப் பார்த்தால் குறைந்து வருகிற காரணத்தினால், நாட்டின் நலன் கருதி நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிற அரசுக்கு ஊக்கம் தர வேண்டுமே தவிர, அதற்கு மாறாக அவர்களுக்குத் தண்டனை வழங்குவதைப்போல கொடுக்கப்படுகிற நிதியினை குறைப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. எனவே, இனிவரும் காலங்களிலாவது அதுபோன்ற செயலைச் செய்யாமல் பார்த்துக் கொள்வதற்கு நிதி ஆணையம் உரிய வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட பல கோரிக்கைகளை வைத்திருக்கிறோம்.

இவை அனைத்தையும் 16வது நிதி ஆணையம் செயல்படுத்துவதற்குரிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னது மட்டுமல்லாமல், தமிழ் நாட்டில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் 50 சதவிகிதம் நிதி ஒதுக்கிட வேண்டும் என்பதை ஒட்டு மொத்தமாக கருத்துத் தெரிவித்தார்கள்.

அரசியல் வேறுபாடுகள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மாநிலத்திற்கு நிதி வழங்க வேண்டும் என்று அனைத்துத் தரப்பும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இதை மனதில் வைத்து தமிழகத்திற்கு 16வது நிதி ஆணையம் உரிய நீதியும், நியாயமும் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டார்.

### வடகிழக்குப் பருவ மழை! எதிர்வரும் கோடைக் காலங்களில்

# தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டம்!

### சென்னை – காஞ்சிபுரம் மண்டல அனைத்துப் பொறியாளர்களுடன் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனை!

*சென்னை, நவ. 20 -*

*மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நேற்று முன்தினம் (18-11-2024) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழக சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டல அனைத்து பொறியாளர்களுடன் வடகிழக்கு பருவ மழை மற்றும் எதிர்வரும் கோடைகாலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைப்பெற்றது.*

*இக்கூட்டத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், அ. ரா.மாஸ்கர்னஸ், இயக்குநர் (பகிர்மானம்) மற்றும் தொடர்புடைய தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.*

**தடையில்லா மின்சாரம்!**

*இந்த ஆய்வுக்கூட்டத்தில், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திட்ட முன்னேற்றப் பணிகள் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றப் பணிகள் குறித்தும், எதிர்வரும் கோடைகால மின் பளுவை எதிர்கொள்வதற்கு இம்மண்டலங்களில் எடுக்கப்பட்டுவரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.*

*இந்த ஆய்வின் போது, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டலங்களில், 30 நிமிடங்களுக்கு மேல் மின் தடங்கல் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்து ஒவ்வொரு பிரிவு அலுவலரிடமும் அதற்கான காரணத்தை அந்தந்த அலுவலர்களிடம் அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து தொடர்ச்சியாக மின் தடங்கல்*



*ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனடியாக சரிசெய்வதற்கு அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.*

*இந்த ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து அலுவர்களிடமும் நேரடியாக அவர்களுடைய பிரிவு அலுவகத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், மின்னகத்தில் பெறப்பட்ட புகார்கள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வராவண்ணம் அனைத்து அலுவலர்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.*

*மழைக்காலங்களின் போது தண்ணீர் தேங்குவதன் பொருட்டு பில்லர் பெட்டிகள் பழுதடைவதை தடுக்கும் பொருட்டு, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டலங்களில் இதுவரை 6024 பில்லர் பெட்டிகள் தரை மட்டத்திலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 503 பில்லர் பெட்டிகளை உயர்த்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை, இம்மாத இறுதிக்குள் முடித்திடுமாறு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.*

*சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் இதுவரை 5,433 வளைய சுற்றுத்தர அமைப்புகள் (Ring Main Unit) 785 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முழுவதுமாக நிறைவடைந்துள்ளது. மேலும், சென்னை மண்டலத்தில் கூடுதலாக 310 வளைய சுற்றுத்தர அமைப்புகள் (Ring Main Unit) 51 கோடி ரூபாய் செலவில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.*

**9 இடங்களில் 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள்!**

*எதிர்வரும் கோடை கால மின் பளுவினை எதிர்கொள்ளும் விதமாக, சென்னை மண்டலத்தில் மாதவரம் ரேடியன்ஸ், மகாகவி பாரதியார் நகர், பருத்திப்பட்டு, சதர்ன் அவென்யூ, சோழவரம், புதுப்பேட்டை, முண்டக்கன்னியம்மன் கோவில், டேவிட்சன் தெரு, கணேஷ் நகர் ஆகிய 9 இடங்களில் 33/11 கி. வோ. துணை மின் நிலையங்கள் 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*இதேபோன்று, காஞ்சிபுரம் மண்டலத்தில் AAI Staff Quarters, மாங்காடு ஆல்டிஸ், அரசன்கழனி மற்றும் குறிஞ்சி நகர் ஆகிய 4 இடங்களில் 33/11 கி. வோ. துணை மின் நிலையம் 96.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.*

*சென்னை மண்டலத்தை பொறுத்தவரை தற்போது துணைமின் நிலையங்களில் இயக்கத்தில் உள்ள 16 மின் மாற்றிகளின் திறனை தரம் உயர்த்திடவும், இதே போன்று, காஞ்சிபுரம் மண்டலத்தில் 5 மின் மாற்றிகளின் திறனை தரம் உயர்த்திடும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.*

*பருவமழை மற்றும் எதிர் வரும் கோடை கால மின் பளுவினை கருத்திற் கொண்டு தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்படுமாறும், தடையில்லா சீரான மின்சாரம் வழங்குவதற்கு தேவையான தளவாட பொருட்கள் மற்றும் உபகரணங்களை கையிருப்பில் வைத்துக் கொள்ளுமாறும், மின் கட்டமைப்பினை சீர் செய்யும் பணிகளில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களும் உரிய பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் பணிகளில் ஈடுபட்டு விரைவாக மின் கட்டமைப்பினைச் சரி செய்யு மாறும் அமைச்சர் அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.*

*மின் சேவைகள் மற்றும் மின் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்,*

### மாநகர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்

# சுமைக் கட்டணம் வசூலிப்பது குறித்து அறிவுறுத்தல்!

### மாநகர போக்குவரத்துக் கழகம் அறிவிப்பு!

சென்னை, நவ.20–

மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் தாங்கள் கொண்டு செல்லும் பொருட்களுக்கான சுமைக் கட்டணம் குறித்து நடத்துநர் மற்றும் பயணிகளிடையே சுமுகமான உறவை உறுதி செய்யும் வகையில் பயணிகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் (Suggestion) /புகார்களின் அடிப்படையில் மா.போ.கழகம் இயக்கும் சாதாரண, விரைவு மற்றும் சொகுசு பேருந்துகளில் நடத்துநர்கள் பயணிகள் கொண்டுவரும் சுமைகளுக்கு (Luggage), சுமைக்கட்டணம் வசூலிக்கும் போது கீழ்கண்ட விதிமுறைகளை பயணிகளிடம் நடத்துநர்கள் பின்பற்றி சுமைக் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அறிவுறுத்தப்படுகிறது.

1. மா.போ.கழக பேருந்துகளில் பயணிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்காக தோள்களில் மாட்டி செல்லக்கூடிய பைகள், துணிகள் அடங்கிய கைப்பெட்டிகள்/ பைகள், கேமிரா போன்ற கையடக்கமான சாதனங்கள், Laptops, சிறிய அளவிலான கையில் எடுத்து செல்லதக்க மின் சாதன பொருட்கள் போன்றவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகள் (Wheel Chair), கலை நிகழ்ச்சிக்கு செல்லும் நாட்டுப்புற கலைஞர்கள் கொண்டு செல்லும் வாத்திய கருவிகள் முதலியவைகளும் இலவசமாக ஏற்றிச் செல்லக் கூடிய சுமைகளாகும்.

2. மா.போ.கழக பேருந்துகளில் பயணிகள் தங்கள் உடமைகளை எடுத்துச்செல்ல டிராலி வகையான சூட்கேஸ்கள் அதிகபட்சமாக 65cm (Medium Size) அளவுள்ள சூட்கேஸ்கள் மற்றும் பைகள் ஆகியவைகளை கட்டணமின்றி பயணிகள் எடுத்துச் செல்ல அனுமதிக்கலாம்.

3. மா.போ.கழக பேருந்துகளில் ஒரு பயணி சொந்த உபயோகத்திற்கான 20 கிலோ எடையுள்ள பொருட்களை கட்டணமின்றி எடுத்துச்செல்ல அனுமதிக்கலாம்.

4. பயணிகள் எடுத்துவரும் 65cm (Large size) அளவிற்கு மேல் உள்ள டிராலி வகையான சூட்கேஸ்கள் மற்றும் பெரிய பைகள், 20 கிலோவிற்கு மேல் எடையுள்ள சுமைகளுக்கு 1 பயணிகளுக்கான பயண கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

5. 20 கிலோவுக்கும் குறைவான எடையுள்ள வணிக நோக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் சுமைக்களுக்கு 1 பயணிகளுக்கான பயண கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

6. அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள், கடத்தல் பொருட்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது.

7. பேருந்தில் அதிக இடத்தை ஆக்கிரமித்து மற்ற பயணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பெரிய சுமைககளை அனுமதிக்கக் கூடாது.

8. சக பயணிகளை பாதிக்கும் ஈர மான சுமைகளை அனுமதிக்கக் கூடாது.

9. பயணிகள் இல்லாத சுமைகள் தனியாக பேருந்தில் அனுமதிக்கக் கூடாது.

10. செய்தித்தாள்கள் மற்றும் தபால்களை கொண்டு செல்ல, முன் அனுமதி பெற வேண்டும்.

டிராலி வகையான சூட்கேஸ்கள் கொண்ட சுமைகள் மற்றும் கட்டணங்கள் குறித்த விளக்கத்தினை நடத்துநர்கள், போக்குவரத்து மேலாளர்கள், ஆய்வாளர்கள், பயணச்சீட்டுப் பரிசோதகர்கள் மற்றும் நேரக்காப்பாளர்கள் அனைவருக்கும் விளக்கிக்கூறி தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து கிளைமேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்கள் ஆகியோருக்கு மேலாண் இயக்குனர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மாநகரப் போக்குவரத்துக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவிப்பு!**

பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.மணிவண்ணன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ப.கவியரசு, எம்.ஏ., பி.எல்., (2/110, கிழக்கு தெரு, காடூர் அஞ்சல், குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் - 621 716) அவர்கள் பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.11.2024

**என்.ஆர்.இளங்கோ**
செயலாளர்
தி.மு.க. சட்டத் துறை



கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் நடைபெற்ற கொலைவெறித் தாக்குதலில் காயமுற்று சிகிச்சை பெற்று வரும் செயலாளர் ரெஜிராஜை கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன், தென்காசி தெற்கு மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாதன், இளைஞர் அணியைச் சேர்ந்த துரை பேச்சிமுத்து ஆகியோர் சந்தித்து நலம் விசாரித்தனர். அப்போது கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒரப்பம் ஊராட்சி, ஜெய் ஸ்ரீ கல்யாண மண்டபத்தில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், கூட்டுறவு வாரவிழா உறுதிமொழியினை அனைவரும் எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் , மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி. செங்குட்டுவன், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் நடராஜன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.